# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

அசல் வழக்கு எண். **30/2022**

நாள் 26.04.2024

**பெயர் :அம்பிகாபதி**

**PW1**

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நானும் வழக்கின் வாதியும் உறவுக்காரர்கள் என்றால் சரிதான். அவர் எனக்கு துாரத்து உறவுகாரர் ஆவார். நான் பள்ளி படிப்பு முடித்து ITI படித்துள்ளேன். இந்த வழக்கு பணம் கொடுக்கல் வாங்கள் சம்மந்தமான சொத்தை நான் பார்வையிட்டுள்ளேன். வழக்கின் வாதி இன்று நீதிமன்றம் வரவில்லை நான் மட்டும் தான் வந்துள்ளேன். வழக்கு சம்மந்தப்பட்ட சொத்தில் மின் மோட்டார், காம்பவுண்ட் வேலி, ஒரு செட்டு போடப்பட்டுள்ளது. மின் மோட்டார் தண்ணி வெளியே செல்ல வாய்கால் மற்றும் தொட்டி உள்ளது என்றால் சரிதான். மரிமுத்து, ஜோதி உயிருடன் உள்ளார்கள் என்றால் ஜோதி யார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 உள்ள சாட்சி கையெழுத்து வா.சா.ஆ.12 ஆகும். என்னிடம் காட்டப்படும் கையெழுத்து என்னுடையது ஆகும். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.01.2022 ல் என்னிடம் காட்டப்படும் கிரய ஒப்பந்தம் பி.வா.சா.ஆ.2 ஆகும். வா.சா.ஆ.3 ல் காட்டப்பட்டுள்ள மாரிமுத்து என்பவரும், பி.வா.சா.ஆ.2 ல் காட்டப்பட்டுள்ள முதல் கையெழுத்தும் இரண்டும் ஒருவரே ஆவார். வா.சா.ஆ.2, வா.சா.ஆ.1 ஆவணம் தயாரித்து எனக்கு தெரியாது. அது எங்கு தயாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் தயாரித்த இடத்திற்கு செல்லவில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணம் எங்கு தயார் செய்யப்பட்டது, எப்படி தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. நானும் வாதி அருள்செல்வன் என்பவரும் 1ம் பிரதிவாதியின் சொத்தை மோசடியாக பெறவேண்டும் என்பதற்காக கூட்டாக சேர்ந்து ஒரே நாளில் ஒரே தட்டச்சு செய்வது மூலம் தயாரித்துள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. 05.01.2022 வா.சா.ஆ.1 ஏற்பட்ட போது 1 ம் பிரதிவாதி ரெங்கசாமி திருக்குவளை தாலுக்கா மடப்புரத்தில்

வசித்து வந்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து சம்மந்தமாக எந்த ஒரு வில்லங்கமும் இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது படித்து பார்த்த பின்பு எனக்கு தெரியும். எனக்கு ரெங்கசாமி 15 வருடங்களாக பழக்கமானவர். 05.01.2022 ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் நல்ல ராசியாக தான் இருந்தார்கள். வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து ரெங்கசாமி உடையது இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் 05.01.2022 ல் ஊருக்கு வரவில்லை என்றும், பணம் எதுவும் வாங்கவில்லை என்றும், இருவரும் கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் உள்ள மின் மோட்டார், காம்பவுண்ட் சுவர், மரம் வகைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி நான் மற்றும் வாதியிடம் இருந்து வாங்கிய கைமாற்று கடனை திரும்பி பெறுவதற்காக கையெழுத்து வாங்குவதாக கூறி 1 ம் பிரதிவாதி குடி போதையில் இருந்ததை சாதகமாக பயன்படுத்தி கையெழுத்து பெறப்பட்ட பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை முன்நிறுத்தி வாதி தரப்பு சான்று ஆவணம் பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி இஞ்சினியர் படிப்பு படித்துள்ளார். கிரயம் வாங்குவதாக இருந்தால் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து தான் வாங்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியாது. எவ்வளவு தொகை பேங்க் மூலமாக பண பரிவர்தனை செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் எவ்வளவு தொகை என்று தெரியாது. வாதி எங்கிருந்து பணம் வாங்கினார் எப்படி கொண்டுவந்தார் என்று எனக்கு தெரியாது. 17.01.2022 ல் ரூ. 14 இலட்சம் பணம் கொடுத்ததாக சொல்வது அப்பட்டமான பொய் என்றும், அவ்வாறு தொகை எதுவும் 1 ம் பிரதிவாதி வாங்கவில்லை என்றும் நாங்கள் பொய்யாக ஆவணங்கள் தயாரித்தோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்ட விவரங்கள் அனைத்தும் நான் தான் எழுதினேன். வா.சா.ஆ.1 ஆவணம் நானும் வாதியும் பிரதிவாதிகளுக்கு எதிராக தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 உள்ள கையெழுத்துகளை வைத்து நானே

மூளையாகவும் ஆலோசகராகவும் இருந்து வாதிதரப்பு சான்று ஆவணம் தயாரித்தோம் என்று சொன்னால் சரியல்ல.

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1 ல் ரெங்கசாமி கிரயம் பெற்ற விவரம் உள்ளது. மூல பத்திரத்தை எழுதிய அன்று நான் பார்க்கவில்லை. ரெங்கசாமி சொத்தை ரூ.34 ஆயிரம் ரூபாய்க்கு கிரயம் பெற்றுள்ளார். 2022 ம் ஆண்டில் தாவா சொத்தின் அரசு மதிப்பு என்ன என்று எனக்கு தெரியாது. 2022 ம் ஆண்டில் தாவா சொத்தின் அரசு மதிப்பு ரூ.2,38,000/- என்றால் பத்திரம் செய்த போது தான் தெரியும். சொத்தின் மதிப்பை இணைய வழி மூலம் பார்க்கலாம் என்ற விவரம் எனக்கு தெரியும். சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் தான் ஆவணங்கள் ஏற்படுத்துவார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அப்படி இல்லை. தாவா சொத்தை 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு செட்டில் மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்த விவரம் தெரியுமா என்றால் வாதி சொல்லிதான் தெரியும். நான் பத்திரம் எழுதுவதற்கு அரசு உரிமம் எதுவும் பெறவில்லை. வா.சா.ஆ.1 ல் 2 ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றும், அதே போல் வா.சா.ஆ.2 ல் 2 ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றும் நான் சொல்வது தவறு என்றும், 2 ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் வாதியும் சேர்ந்து கொண்டு வா.சா.ஆ.1 மற்றும் 2 ல் 2 ம் பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு ஆவணம் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் அவருடன் சேர்ந்து நான் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.